வீடுகளில் பயன்படுத்தும் மின்சாரம் 50 யூனிட் உடனடியாகக் குறைக்கப் படும் என்றும், கடைகளுக்கெல்லாம் இரவு ஏழரை மணிக்குப் பிறகு மின்சாரம் கிடைக்காது என்றும் கூறப்படுகிறது. இதன் காரணமாக தெருவெல்லாம் இருட்டாகக் கூடிய நிலைமை இருக்கிறது. சாதாரணமாக நகர்ப்புறங்களில் இரவு பத்து மணி வரை மின்வெளிச்சம் இருப்பதை நாம் எல்லோரும் அறிவோம். இனிமேல் இரவு ஏழரைக்குப் பிறகு தெருவெல்லாம் இருட்டாக இருக்குமாதலால் நகரத்தில் நடமாட முடியுமா என்ற அபாயம் கூட இருக்கிறது. இப்பொழுதே பலவிதமான திருட்டுக் களெல்லாம் இருந்து வருகின்றன என்று அன்றைக்குச் சொன்னார்கள். இனி திருட்டு பயங்கூட அதிகமாகக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மின் வெட்டு தொழிலாளிகளை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதைக் குறிப்பிடுவதற்குத்தான் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். குறிப்பாக, பஞ்சாலைத் தொழில்தான் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாலையில் ஏற்கெனவே மின்வெட்டு காரணமாக தொழி லாளர்கள் பூராவுக்கும் லே-ஆப் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அரைச் சம்பளம் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டு, அரைச் சம்பளம் போதாது, முழுச் சம்பளம் தரவேண்டும் என்று தொழி லாளர்கள் சார்பில் சொன்னார்கள். 60 சதவீத மின்வெட்டு. 75 சதவிதமானவுடனே. மில் முதலாளிகள் சங்கம் இனிமேல் மில்களில் மேலும் வேலையைக் குறைக்கப் போகிறோம் என்று ஏற்கெனவே அறிவித்துவிட்டார்கள். அங்கிருந்து அவசரத் தந்திகள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. அங்கே தொடர்ந்து ஏற்கெனவே இருந்த அளவுக்காவது மின்சாரம் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையிலாவது கொடுக்க வேண்டும்; அப்பொழுதுதான் உற்பத்திக்கு ஓரளவு உத்தரவாதம் ஏற்படும்; தொழிலாளர்களுக்கும் லே-ஆப் காம்பென்சேஷன் கொடுக்க வேண்டும். ஐ. என். டி. யு. சி. தலைவர் திரு இராமானுஜம் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். காலதாமதமில்லாமல், உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்ற காலத்தில் அரசு எப்படி பாராமுகமாயிருந்ததோ அப்படியில்லாமல், உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்தின்